தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**பேராசிரியர்கள் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்**
**-வேளாண் பல்கலை துணைவேந்தர் வலியுறுத்தல்**

தமிழ்நாடு வேளாண்மைப் பலக்லைக்கழகத்தில் ஆராய்ச்சி ஆராய்ச்சி இயக்குனரகமும் இயல் அறிவியல் மற்றும் கணினி துறையும் இணைந்து, 'ஸ்கோபஸ்' – எனும் உலகளாவிய ஆய்வு தொகுப்பின் உதவி கொண்டு பேராசிரியர்கள் தங்களின் ஆய்வுத் திறமையை மேம்படுத்த ஒரு நாள் பயிலரங்கினை நேற்று (25-11-2015) ஏற்பாடு செய்திருந்தது.

பயிலரங்கில் தமிழ்நாடு வேளாண் பல்கலையை சேர்ந்த 90 பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். பயிலரங்கில் பங்கேற்றவர்களை வரவேற்று பேசிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர், முனைவர். எம். மகேஸ்வரன் அவர்கள் ஆய்வுகளுக்கு நிதி ஒதுக்கும் நிறுவனங்கள் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பேராசிரியர்களின் ஆய்வுத் திறன்களை அவர்கள் சமர்ப்பிக்கும் ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்ட தீர்மானிக்கிறது. எனவே, ஆய்வுத்திறன்களை மேலும் மேம்படுத்த இதுபோன்ற பயிலரங்கங்கள் உதவும் என்றார்.

பயிலரங்கினை துவக்கி வைத்து பேசிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள், ஆய்வுகள் செய்வது மட்டுமன்றி அதனை தகுந்த ஆய்விதழ்களின் மூலமாக எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும். பேராசிரியர்கள் தங்களின் ஆய்வுகள்தான் அவர்களின் முகவரி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த பயிலரங்கமானது உலகளவில் எவ்வகையான ஆய்வுத் திட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, நாம் எங்கே நிற்கிறோம் என்பதனையும் அதனை அடிப்படையாகக் கொண்டு மேலும் முனைப்போடு செயல்பட ஊக்குவிக்கும் விதமாகவும் அமைய வேண்டும் என்றார்.

மேலும், ஆய்வுக்கான முதலீடுகளை ஆராய்ச்சியாளர்களே திரட்ட வேண்டி இருப்பதால், கூடுதல் உழைப்பும், சமூகத்திற்கு பயனுள்ளவற்றையும் அளிக்க வேண்டும் என்ற அக்கறையும் அவசியம் என்றார்.

பயிலரங்கில் பங்கேற்றவர்களை இயல் அறிவியல் மற்றும் கணினி துறைத் தலைவர் எம். ஆர். துரைசாமி அவர்கள் நன்றியுரை தெரிவித்தார். விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். கு.ரா.ஆனந்தகுமார் மற்றும் பல்கலைக்கழக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்